ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# திருவேங்கடமுடையான்பேரில்

—:O:—

## தரிசனப்பதிகம், ஆக்கப்பா மாலே, ஆர்த்திரசமாலே, அலர்மேலுமங்கைத் தாயார் பேரில் பிரபத்திமாலே,

இந்நான்கும் அடங்கியுள்ளன.

——O——

9277

இஃது

...திப்பாறை என்னும் நல்லூர் விஸ்வெஜ்ஞ

சங்காசாரியார் குமாரர்

**பாகவத ஸ்ரீபாதரேணு**

**...முத்துகிருஷ்ண மதுரகவி ராமாநுஜ.**

...தமிழ்ப்பண்டிதரவர்கள்பற்றியது

——

...த்திபாறை மலேப்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ

...ப்பாரெட்டியாரவர்கள் பொருளுதவியால்

அச்சில் பதிவிக்கப்பட்டது.

**First Edition Copies 1000.**

*(Copy right Registered.)*

தர்பார் பிரஸ்

திருநெல்வேலி பாலம்.

1912.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# சாத்துக் கவிகள்.

---

கொச்சனைகுளத்தில் வசிக்கும் சஞ்சி இராமசுவாமி நாயுடு அவர்கள் குமாரர் மாசி S. I. ரயில்வே P. W இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் முத்துசுவாமி நாயுடு அவர்கள் இயற்றியது.

அலர்மேலு மங்கை யடித்தா மனாக்கு
மலர்வேங் கடவன் மலர்த்தாட் — கிலகுபுகழ்ப்
பூப்பதிக மாலை புனைந்தான் மதுரகவி
யாப்பதிக நாவலவ ரேறு.

---

இந்நூலாசிரியர் மாணுக்கரும் குண்டலகுத்தூர் ஸ்ரீமான் திருவேங்கடசுவாமிகள் குமாரர் வேங்கட ராமாநுஜய்யா இயற்றியது.

கொண்டல ணைந்துயர் பஃறரு வடிவொடு
குழுவி நிரைந்து நிறைஇ
அண்டர்தொ ழுந்திரு வேங்கட வாணனை
யலர்மக ணாயகனைத்
தண்டமிழ் மொழிகொடு செஞ்சுவை தழுவிய
சாற்றினன் மதுரகவி
பண்டிதமுத்து கிருட்டிண நங்கள
பாரமகா கவியே

---

இந்நூலாசிரியர் மாணுக்கரும் பேரனுமாகிய பரிவில்லிகோட்டை ஸ்ரீநிவாசாசாரியரியற்றியது.

நேமிசூழ் பாரி னிபுணர்தொழு கின்றமுத்து
சாமி கவிவல்லோன் சாற்றினனல்— பூமிதனில்
தன்னனைய வேங்கடவன் ரானிற் பிரபந்தம்
இன்னமுதம்போல வினிது.

---

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# திருவேங்கடமுடையான் பேரில்

## தரிசனப்பதிகம்.

---

### காப்பு.

நங்கைச் சிறுநன் னுதல்சேய் நவிலும்
மங்கைக் கிறைவன் பதம்யான் மறவேன்
துங்கைத் திருவின் றுணைசே டகிரிச்
செங்கைக் கனிகாண் பதிகஞ் செயவே.

### நூல்.

திருமார் பமுமீ ரிருதிண் புயமும்
அருளா னனமும் மபிடே கமுமார்க்
கருஞா யிறெனக் கருடன் பிடர்மேல்
வருவாய் வருவாய் வடபூ தரனே. (1)

சுடர்தீ பிகைமே லெழுதா பமெனப்
படர்நீள் சிறகர்ப் பறவைப் பதிமேல்
இடர்வேர் கெடவென் னெதிரே வருவாய்
அடரா யிரவா யகிவெற் பரசே. (2)

கனகக் கிரிசூழ் கருமா முகில்போல்
வினதைக் கொடிசூ நுவெரிந் மிசையே
புனநற் றுளவா புயகா சலவென்
மனநெக் குமலர்ந் திடவந் தருளே. (3)

காரார் புயலிற் கதிர்மின் னெழில்போல்
சீரார் திருவோ டிறுதிக் கனன்மேல்
ஓரா ழிகிளர்ந் தெனவூர் தியின்மேல்
வாராய் வடவேங் கடமா யவனே. (4)

இகமே பொருண்மூன் றுமியைந் திறுவாய்
மிகவே நலமந் தமில்வீ டுபெறப்
புகவே வருகிற் றிபுயங் கபதி
நகனே திருமா மகணா யகனே. (5)

பாதத் துணையும் பயில்கின் றமுகச்
சீதப் பொலிவுந் தெரிசித் திடவே
வேதப் பறவைப் பிடர்மேல் வருவாய்
மேதக் கபணிக் கிரிமெய்ப் பொருளே. (6)

பூவாழ் திருமா துதவும் பொருளும்
ஓவா தொழுகன் பமருங் குடியும்
ஏவா துணர்மைந் தருமேன் றபதம்
தாவா வடசை லதயா நிதியே. (7)

பாங்கா கியபம் புசெல்வப் பொருளும்
ஊங்கார் வழுறுங் கலையொண் பொருளும்
நீங்கா மனுகர்ந் திடநீ யருள்வா
பூங்கார் தவழே ழுபொருப் பவனே. (8)

தனதா னியரா சிதரா தலமும்
கனமே னிலைவீ டுகளுஞ் சியமும்
மனமா ரவடைந் துமகிழ்ந் திடவா
வனமோ விபுயங் கவனாக் கரசே. (9)

மெய்யிற் றிகழ்வேங் கடவா தரவா
செய்யிற் புலனிற் றெருளாள் வினையில்
நெய்யிற் சுவையுண் டிநிரந் தரமும்
கையிற் பொருள்கூ டுகமந் திருவே. (10)

தேடா துதிருந் துசெல்வம் பெறவும்
வாடா துசுகிக் கவும்வந் தருள்வா
நாடா தினியென் னைநலி ந்திடவோ
கூடா துசொனே னெழுகுன் றவனே. (11)

மூவா முதல்வா முழுநா யகவா
தேவா திவவா திருநல் குதிவா
பூவா முரவா புவிமான் வரவா
வாவா விரைவா வடபூ தரனே. (12)

## வாழி.

புயமங் கிரிமார் புமுகம் பொலிதிவ்
வியமங் களமெய் யெழில்வேங் கடவன்
செயமங் கைபுகழ்த் திருசெங் கமலை
நியமங் களும்வா ழிநிரந் தரமே.

---

திருவேங்கடமுடையான் றிருவடிகளே சரணம்.

தரிசனப்பதிகம் சம்பூர்ணம்.

---

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம :

# திருவேங்கடமுடையான் பேரில்

## ஆக்கப்பாமாலை.

---

### காப்பு.

பூக்கத் திருவேங் கடபூ பதிமேல்
ஆக்கப் பதமா லையறைந் திடவே
காக்கக் கடவன் குருகைப் பெருமான்
போக்கத் தமிழ்வே தமொழிந் தவனே.

### நூல்.

சீரார் திருவேங் கடதீ னசகா
தீரா வெனதின் னல்சிதைந் துபட
வாராய் மலர்மா தொடுவா ழுவெனைப்
பாரா யெனையாள் வதுநின் பரமே. (1)

அமிழ்தோ டுபிறந் தவணங் கரசின்
இமிழா ரமிர்துண் டுறையேழ் கிரியா
குமிழுய் துளவங் கமழ்நின் கழல்கள்
தமியா கியவென் றலைமே லனவே. (2)

அறமும் பொருளின் பமுமந் தமியான்
பெறகின் றபெரும் பதமும் பெறவே
நிறநின் றுவணங் கொடுநீ வருவாய்
விறல்கொண் டபணிக் கிரிமே லவனே. (3)

எண்ணோ டெழுத் துமெனக் கருளாய்
கண்ணோ டுகருத் தருளக் கடவாய்
மண்ணோ டுவிண்ணுண் டுமிழ்வா யவனே
விண்ணோ டுபணிக் கிரிமே யவனே. (4)

நாமா தருளுங் கலைஞா னமுமொண்
பூமா தருளும் பொருளின் பமுமுண்
டாமா றுகடைக் கணியை யசரண்
ஓமா யவனே யுரகா சலனே. (5)

கடைகா ணருமே தகுகல் விமதி
நடைசீ ரதிகா ரநலந் தருவாய்
உடையாய் வடவேங் கடவோங் கலில்வாழ்
தடைதீர் கருணா மிர்தசா கரனே (6)

இயலே யிசைநா டகவின் றமிழின்
செயலே கவிசொற் பொருள்செய் யநலம்
பெயலே யுறநல் குகபீ தகமின்
மயலே பெருகும் வடபூ தரனே. (7)

பரதத் தொடுபண் டிதசோ திடமும்
கரமுற் றிலகுங் கனிநெல் லியினீ
டரவக் கிரிவா ணவகம் புறமும்
சரதத் துவிளங் கியதந் தருளே. (8)

தெய்வங் குருமெய் யடியார் திறனில்
செய்தொண் டெரிந் துநயந் துபுரிந்
துய்யும் பொருள்கூ டவுறுத் தருளாய்
வையம் புகழே ழுமலைக் கரசே. (9)

தருமப் பதசா லையுமா லயமும்
மருமொட் டயிழ்பூ வனம்வா விகளும்
நிருமித் துநிலைப் பியநீ டுபெரும்
பொருளெற் கருளாய் புயகா சலனே. (10)

ஊற்றுப் புனல்போ லுலகொண் பொருளும்
பேற்றுக் குரிமெய்ப் பொருளும் பெருக
ஏற்றுப் பிரதா பமியைந் திடவை
வீற்றுத் திகழ்வேங் கடமெய்ப் பொருளே. (11)

இல்லா ளுமகா ருமிருந் தனமும்
நல்லா யுளும்யோ கமுநன் னடையும்
எல்லா நலனும் பெறுகென் றருளென்
பொல்லா மணியே வடபூ தரனே. (12)

இற்பெற் றியிதத் துறையே குவழாக்
கற்புத் தகுபா ககளத் திரமும்
சற்புத் திரருந் தனமுந் தழுவிப்
பொற்புற் றிடவை புயகா சலனே. (13)

வாழைக் கடிவா ழையின்மல் கிநிறை
தேழைத் தமியேன் குடியின் புறவை
பீழைப் படலைப் பிறவித் திமிரப்
பாழைக் கடிசே டபருப் பதனே. (14)

படிமீ துவளம் படுபோங் கர்வயின்
நெடிதோ டுவடக் கிளைநேர் தரவென்
குடியே றவரங் கள்கொடுத் தருளாய்
அடிகேள் கிரியே ழுடையற் புதனே. (15)

பொங்கர்க் கிளைகொம் புவளார் பொதுளும்
அங்கற் பகமா வணிகான் முளைகள்
தங்கப் பதுமைத் தகவேர்ங் கவருள்
எங்கட் கரசே யெழுபூ தரனே. (16)

புலமுஞ் செறுவும் புனலும் பலனும்
நலமுங் கனமுந் நடுநன் மனையும்
இலமுஞ் சுதருங் கிளையின் பமுமின்
குலமுந் தருகென் வடகுன் றவனே. (17)

காப்புங் கழலென் றுகசிந் துகரங்
கூப்புந் தகவோர் குலவேழ் கிரியாய்
தோப்புந் துரவுந் தொர்கொல் பிறவும்
கோர்ப்புங் குலையா துகொடுத் தருளே. (18)

பல்விர்த் திகளிற் பொருள்பண் ணவிழுச்
செல்வத் தினுகர்ந் துதிளைப் பவியன்
கல்வித் திருவிற் கனியப் பணியாய்
வில்விட் டொளிர்பொன் வடவெற் பவனே. (19)

ஏரும் மெருதும் புரியேவல்களும்
சீரும் பயனுந் திருநின் னருளும்
சேரும் படிசெய் தருடெள் ளுணர்வோர்
ஓருந் தகவோர் யுரகா சலனே. (20)

விவசா யவிருத் திகண்மே விடவும்
நவதா னியமும் விளைநன் னிலமும்
தவமா நிதியுந் தருவாய் வருவாய்
பவனா சனபோ கிபருப் பதனே. (21)

சோதிப் பணிசை லசுவா மியெனை
வாதிக் குமிடித் துயர்வா தைதப
நீதித் திறனா னிதியீட் டிநினை
ஓதித் தொழுதுய் யுமாற் றருளே. (22)

பொன்னே றவளந் தருபூ மிகளும்
தென்னே றவெழுச் சிசிறந் துதிரு
மின்னே றவழுத் தெழுவெற் பவயான்
முன்னே றமுழுப் பமுடித் தருளே. (23)

அலவற் றலவா கவறப் பகுதி
பலவற் றுபயோ கமுறப் படரச்
செலவிற் குவளம் படுசெந் நெனிதிக்
குலமிக் கருணீ வடகுன் றவனே. (24)

ஒன்னார் நகவுற் றவருள் கனாய
இன்னா தபடுந் துயரெத் தனையே
உன்னா லெனதின் னலொளித் திலையேல்
என்னா னறைகே னெழுபூ தரனே. (25)

நந்தா தசெல்வந் தவஞா னநடை
உந்தாண் மைபெரும் புகழொண் மையொடென்
சந்தா னம்வளர்ந் துதழைந் திடவே
தந்தாள் வடகோ டுதழீஇ யவனே. (26)

பான்மே னறிதின் பழம்வீ ழுதல்போல்
மேன்மே னிதிதா னருமே விடவை
வான்மே லணைவேங் கடவா ணமறை
நான்மே னடனம் புரிநா யகனே. (27)

ஊணுந் தருவா யுடையுந் தருவாய்
பூணுந் தருவாய் பொருளுந் தருவாய்
மாணுந் தருவாய் வடபூ தரயான்
பேணுந் தருவாய் பிறகிட் டிடலே (28)

நெல்லன் னருநெய் தயிர்பால் விரவும்
நல்லன் னருஞா னருமூட் டுகெனைச்
செல்லன் னநடைத் திருநா யகனே
மல்லன் னலமூர் வடவெற் பவனே. (29)

புகழோங் கியகே ளொடுபுல் குபுபூ
முகிழோங் கியமூ ரலரும் புகளி
மகிழோங் கியசீர் பெறவைத் தருளாய்
திகழ்வேங் கடமே லுறைசிங் மயனே. (30)

தேசஞ் செயவென் குடிசெந் திருவும்
வாசஞ் செயவந் தருணீ புரிக
கூசஞ் செயமெய்ம் மயிர்குச் செறியுங்
நேசஞ் செயவேங் கடநின் றவனே. (31)

இணையின் றியவேழ் நிலைமா ளிகைதிண்
டணையுஞ் சலின்மஞ் சமரும் பொருளாட்
டுணையுண் டுபெடுத் தினைதொண் டுகொளாய்
பணைநன் கிமிர்சே டபருப் பதனே. (32)

இபமும் பரியும் மிணர்வெண் குடையும்
அபரஞ் சியின்முத் தணிதண் டிகையும்
சுபமங் களசோ பனமுந் தருவாய்
விபவங் கெழுவேங் கடமெய்ப் பொருளே. (33)

குண்டா னகல்கொப் பரிவட் டில்குடம்
அண்டா பிடிசெம் புவிளக் கணிமற்
றுண்டா கியபண் டமொருங் குதவாய்
வண்டா டுதுழாய் வடசை லவனே. (34)

நோயற் றதொர்வாழ் வுமனோ சலன
ஆய்வற் றதொர்போ கமுமை யவருள்
தாயைக் குடர்தூய் துசெயத் தனமேல்
வாய்வைத் தபுயங் கவனாக் கரசே. (35)

முள்ளும் முறியா மன்முடித் திடுபூ
உள்ளும் புலரா மலுறப் புரவாய்
தெள்ளுஞ் சுருதிச் சிரநா வலர்கள்
விள்ளுந் திருவேங் கடவெற் பவனே. (36)

திடசிந் தனைதே கசுகந் தெளிவும்
முடமின் றியசீர் முயல்வும் பயனும்
இடமும் பொருளே வல்களும் பெறவை
வடவண் கிரிவா ழுமனோ கரனே. (37)

கேடும் பயமுங் கிரகப் பிழையும்
சாடும் பகைவஞ் சகவன் றறுகட்
பூடும் பரிதிக் கெதிர்புன் பனிபோன்
றோடும் படிசெய் யுரகா சலனே. (38)

சாபச் செயல்பூ தபிசா சமிவை
பாபக் கிரகங் கள்படுத் துவபல்
ஆபத் துகளெத் தனையாய் வரினும்
நீபற் றுகவேங் கடநீ டொளியே. (39)

பேய்சூ னியம்வஞ் சனைபில் லிவிடம்
தீயே வல்கணு ரொருடு திட்டிவெலாம்
தூய்தா கவொழித் தருடெய்த் திடவை
மாயா வடவேங் கடமா தவனே. (40)

குட்டம் வலிசூ லைகயங் குருமம்
அட்டம் பலநோ யடரத் தொடரும்
கட்டங் கலவா தசுகந் தருவாய்
சிட்டந் திகழேழ் சிமயத் தரசே. (41)

சீறுந் தறுகட் டெறுதெவ் வினைகள்
ஆறும் பதமுண் ணவநுக் கிரகியாய்
நாறுந் துளவா பழநான் மறைகள்
கூறுந் திருவேழ் குவடுற் றவனே. (42)

சேரும் பலவா கியதீ மையெலாம்
தீரும் பதமா கியசீ ருதவாய்
காருங் கடலுங் கருநெய் தலதும்
நேரும் பணிசை லநிரஞ் சனனே. (43)

நொடியா தல்சகிக் குறுகர்ச் சியலா
மிடிநே ரிடையூ றுபல்வே றனநோய்
கொடிதே யடரக் குழைகோ வுனதொல்
அடியே னுரகா சலவற் புதனே. (44)

வறுமைத் துயரான் மனமாழ் குவனென்
வெறுமைக் கினிமேல் விடிவில் லைகொனுன்
சிறுமைப் படவுந் தெரிகுற் றிலைநீ
பொறுமைத் தகவோ வடபூ தரனே. (45)

சூடே றருமனிந் துரைதூர்ச் சனர்தம்
மாடே றிவருந் திமயங் குமெனை
ஈடே றவிதிக் ககிலாய் தவமோ
கோடேழ் மிசையே நிலைகொண் டவனே. (46)

கடனே படமெல் லைகலக் கமெலாம்
படர்வா ரிகல்விப் பகைபா வவினைக்
கிடனே யுடனே யிதனைத் துடையாய்
வடவேங் கடமே லுறைமா யவனே. (47)

தருணத் துநெருக் குசழக் கரிடம்
இருணப் படவைக் கலையெம் பெரும
அருணப் பிரகா சவடற் றிகிரி
உருணத் துடையா யுரகா சலனே. (48)

அடமா கவெனக் கிடராற் றுநனை
விடமா கியொறுக் குதிவேங் கடவா
திடமா கவிதஞ் செய்திறற் கமிழ்தின்
தடமா கியியைந் துசதா வருளே. (49)

தீங்கா கவிடும் பைசெலுத் தியெனை
வாங்கா துயிர்வாங் குவனெஞ் சர்தமக்
காங்கா லமரிப் படுபூ ளைசெயாய்
ஓங்காரமயா வுரகாச லனே. (50)

செல்வாக் கும்விதண் டைதெரிப் பவனை
வெல்வாக் கும்விளைத் திடுவெய் யவனைக்
கொல்வாக் கும்வகுத் தருள்கூர் மணிகள்
வில்வாக் குமகிக் கிரிவித் தகனே. (51)

எங்குந் தமியே னுனையே றநலந்
தங்கும் பிரபுத் தனமுந் தருவாய்
தொங்குந் தொடலைத் துளபக் களபப்
பொங்கும் புயனே புயகா சலனே. (52)

மன்றே றியநுண் கலைவா ணரிடம்
சென்றே றிவரும் புகழ்செய் தருளாய்
இன்றே றல்பிலிற் றியவின் பமுலாம்
குன்றேழ் மிசைநின் றகுண திகனே. (53)

நயமே லதிகா ரிகணன் குபுகழ்
உயர்கா ரியமுய்க் குமுரந் தருவாய்
புயகா திபபூ தரஆ ருவிக
சயரா சதுரந் தரசம் பிரமனே. (54)

மாகா வலர்தார் முடிமன் னவரோ
டேகா சனயோ கவிருப் பருளாய்
ஆகா ரதரா தலவற் புதனே
நாகா சலவா ணநமோ நமவே. (55)

தின்னுங் கலிவெவ் வினைதீர் தரயான்
முன்னுங் கருமங் கண்முடித் தருளாய்
தன்னுன் னிலைநா டுதபோ தனர்கள்
மன்னுந் திருவேங் கடவா னவனே. (56)

செயமும் புகழுந் திருவின் னருளும்
நயமும் புணருந் நலனன் கருளாய்
வயமுங் குவவும் வனமுந் திருமின்
குயமும் புணர்தோள் வடகுன் றவனே. (57)

நீடுங் கிளையுந் நறைபல் வளமும்
பீடும் புகழும் பெருவாழ் வுமெலாம்
கூடும் படிசெய் தருள்கூ ரிமையோர்
நாடுந் திருவேங் கடநா யகனே. (58)

ஈரெட் டுதவுந் திருவின் னருளால்
ஏரெட் டுறுபே றுமெனக் கருளி
ஓரெட் டுயர்சித் திகளுந் தரவேழ்
காரெட் டுவணைக் கருணா கரனே. (59)

இகழ்தூ டணைபா றவியைந் தசெழும்
புகழ்மே லிடவா கைபுனைந் திலகத்
திகழ்யோ கநலங் கிளர்சீர் பொதுள
அசழ்தீ வினையே ழுமலைக் கரசே. (60)

தபசா ரம்விரும் பியசற் சனர்பால்
அபசா ரமுறு மையமைந் தனையோர்
உபசா ரபலம் பெறவுய்த் தருள்கூர்
சுபசா ரகுணா சுவணா சலனே. (61)

குலமே றவியன் றுகுணஞ் செயல்கள்
பொலமே றவழுக் குவபுன் மையிலா
நலமே றவரா மலைநா டுதபோ
பலமே றவரந் தருவாய் பரனே. (62)

யாமங் களமா கமகார் பெருக
சேமந் தரமா நிதிசே ரவருள்
காமந் தருவேங் கடமா மலையாள்
நாமம் பனிரண் டுடை நாயகனே. (63)

பகவற் குடியா னபதந் தழுவி
இகபுத் தியுமுத் தியுமெய் தவநு
க்ரகமுய்த் தருள்கூர் கெருடத் துசபன் (64)
னகவற் புதபூ தரநா யகனே.

நிருபா திகவேங் கடநிர் மலசிற்
சொருபா வுனைநம் பியவென் றுணிவென் .
இருபான் மரபும் பலிதம் பெறநின்
கிருபா பலம்வந் துகிடைத் ததுவே. (65)

கலிதீ ரநினை துகடைக் கணருட்
பொலிவூர் தரவந் துபுரந் தருள்க
வலிநீள் வினையெற் றலின்மாழ் கிமனம்
நவிகேன் வடவேங் கடநா யகனே. (66)

இயம்பா டுரகா சலவின் றமிழின்
சுயம்பா டுதிறங் கொடுனைத் தொழுவி
குயம்பா டுகிடந் துகுலா வுதடம்
புயம்பா டுகெடன் பணியாய் பொருளே. (67)

சண்டா ளமிடித் தசையிற் பிறனைக்
கொண்டா லெனவின் கவிகூ றிநிதம்
திண்டா டிடவைக் கறிருத் தியெனைத்
தொண்டாள் வடசைல துரந் தரனே. (68)

வீண்போ துவிதிக் கலைவேங் கடமே
காண்போ துபணித் தகயிங் கரியம்
பூண்போ துனமாண் புகழ்ந் தருளும்
மாண்போ தமெனக் குவகுத் தருளே. (69)

கள்ளத் தனடாம் பிகள்காற் கடையே
தள்ளற் கசருப் பபருப் பதனே
உள்ளத் தருள்சே ருரியோ ரெனையாட்
கொள்ளற் குவிதித் தருள்கூ ருகவே. (70)

பழியும் பயமும் பகைபா வமெலாம்
ஒழியும் படிவந் தொருநீ யுதவாய்
வழியும் பிரகா சவளங் களெலாம்
பொழியுந் திருவே ழுபொருப் பவனே. (71)

கருணா நிதியே கமலா பதியே
அருணா தயசந் நிபவா ழிவலா
இருண்மேய் நிலவீ செழிநா கிடனே
பொருணீ யெனையாள் புயகா சலனே. (72)

புரைகொண் டவெனைப் பணிபூ தரனே
உரைகொண் டநிறா லயமுள் வரவே
நிரைநின் றவிலே ககர்நீ சனெனை
வரைகென் றுரைமுன் வரைகென் றருளே. (73)

இகமும் பரமுந் தருவா யிதன்மேல்
சுககொந் தளபோ கசுகந் தருவாய்
சகமின் பிரகா சசரோ ருகநேர்
மூகமெட் டிருவேங் கடமூ தொளியே. (74)

வாழி

மும்மா ரிபொழிந் திடமூ விளைவும்
தெம்மா யவழுங் கியசீர் குலவ
இம்மா நிலமின் புறவிந் திரைமின்
மைம்மால் பயில்வேங் கடம் வாழியவே. (72)

ஆக்நப்பாமாலை சம்பூர்ணம்.
திருவேங்கடமுடையான் றிருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஆர்த்திரசமாலை.

---

## காப்புக்கள்.

சீர்த்திப் புயகச் சிலைமா தவன்மேல்
ஆர்த்திச் சுவைமா லையறைந் திடவே
பூர்த்திக் குமறைத் தமிழ்செய் புலமை
மூர்த்திச் சடகோ பன்முதற் றுணையே. (1)

நிதிவேங் கடமா மலைநீ டொளிமேல்
துதிமா லைதொடுத் தடிசூட் டிடயான்
மதியான் முடியான் வருபூ தபுரி
எதிரா சனையெண் ணியிறைஞ் சுவனே. (2)

பரனா கியபங் கயமின் கிழவன்
நரனா ரணனா கிநவின் றருண்மந்
திரமூ வகலத் தெளிவெய் தியசெய்
வரயோ கியநங் கள்வணங் குவனே. (3)

தருவேய்ந் தநிலன் கொடிதண் புனலின்
குருவேய்ந் தனகொய் மலர்பெய் குவன்யான்
ஒருவேன் கடவே னெனையுய் வுறாசெய்
திருவேங் கடமா குருசே வடியே. (4)

அவையடக்கம்

வெற்பே ழுடைமா தவன்மெய்ப் புகழைக்
கற்பா ரொழியப் பிறகற் பர்களோ
அற்பா னவரே யெனையா ளுடையார்
விற்பார் விலைகொள் ளவுமிக் கவரே. (5)

நூல்.

நினைகென் மனனே நினைகென் மனனே
புனைதண் டுளவப் பெயலைப் புயலைத்
தனையில் கருணைத் தனிநா யகனை
வினைவென் றவனைப் பணிவெற் பனையே. (6)

அத்தா வரதா வரியச் சுதனே
நித்தா பரிபூ ரணநிட் களனே
முத்தா மணிநீ லமுழுச் சுடரே
சத்தா சலனே சரணே சரணே. (7)

ஆக்கந் தருமெய் யுணர்வன் புதரும்
மோக்கந் தருஞா னிகண்முன் னுதொறும்
ஊக்கந் தரும்வேங் கடவோங் கலவுன்
நோக்கந் தருவண் மைநொடிப் பரிதே. (8)

முதுநான் மறையும் முடிகா ணரிதே
சதுரா னனனு திகடா மளவோ
அதுலா திருவேங் கடவற் புதமற்
றெதுசான் றுனமாண் பியல்கட் கினியே. (9)

தண்கா மருதா தவிழ்தா மரைமின்
கொண்கா வுனையோர் குவல்சோ டுகளால்
விண்கா ணுயர்வேங் கடமே லொருநீ
கண்கா ணவிளங் கியகற் பகமே. (10)

சிந்தா மணிநீ விழைதே னுவுநீ
சந்தா னதளங் கெழுகற் பகநீ
எந்தாய் கிரியே ழிரியா வரிகோ
விந்தா சலசா தவிலோ சனனே. (11)

நவைதீ ரமிர்தக் கனியோ நறிதின்
சுவையோ சுவையின் பலமா னசுகக்
குவையோ வொருநீ வடகுன் றவுனக்
கெவைவே றிணையென் னவியம் புகெனே. (12)

கூறுஞ் செயலோ ரவர்கூ றுவதுன்
ஏறும் புகழின் பொருளே யெனலால்
வேறென் புகழ்கேன் வடவேங் கடவா
நாறுங் கமலா லயைநா யகனே. (13)

ஐயந் திரிபின் றியளந் துதெளிந்
தொய்யென் றுணர்சிந் தையுறக் குடையார்
கைதங் கியவா மலகக் கனிபின்
மெய்கண் டுணர்வார் பணிவெற் பவனே. (14)

உருவா யுளதா முணர்வார் பொருணீ
அருவா யிலதா மறியார் பொருணீ
ஒருநான் மறையும் முணரா தனவே
திருமா மலையா வெனையுன் செயலே. (15)

ஆரா தனைசெய் குவனம் புயனே
சீரா டுமவன் சசிசே கரனே
யாரா வெனையாள் குதியே ழுமலை
நாரா யணனே தனிநா யகனே. (16)

ஆரா வமுதங் கையினு மலகம்
நேரா மெனவின் பநிறைந் துவழி
சீரா மகுணா நுபவம் செயவே
கூரா யருள்வேங் கடகுன் றவனே. (17)

பேதைச் சிறுபுன் மதியேன் பிரிவில்
வாதைத் துயர்பற் றறவாய் மலர்நின்
கீதைப் பொருளைக் கிரகித் திடலெப்
போதைக் குரையாய் புயகா சலனே. (18)

மும்மைத் திருமந் திரமும் மைவகைச்
செம்மைப் பொருளுந் தெரிவித் துநெறிக்
கெம்மைப் புகுவித் தருள்கிந் திரையெம்
அம்மைக் குரியா யகிவெற் பரசே. (19)

ஆழ்வார் கள்பகர்ந் தவரும் பொருளின்
கேழ்வார் தருபா டல்கிளத் திநிதம்
வாழ்வா ரொடுகூ டிமகிழ்ந் திடுவொழ்
வேழ்வார் வரைவா ணவெனக் கருளே. (20)

கற்பூ ரநறும் புகைநெய் கனியால்
நிற்பூ சனைசெய் வனிரந் தரமும்
சொற்பூ டணநன் னிலைதுன் னவருள்
பொற்பூர் வடவேங் கடபூ தரனே (21)

தொல்லா ரியர்தூ மரபிற் றுளைவார்
சல்லா பகுணு னுபவந் தருவாய்
பொல்லா நெறிபுக் கவர்புல் லுணர்விற்
செல்லா தபுயங் கசிலைக் கரசே. (22)

நினிலுந் தவஞா னநியா யநிலை
தனிலுந் நினதன் புறுதா சர்குணத்
தினிலுங் கரைசிந் தையெனக் கருளாய்
உனிலுஞ் சுவையூ ருரகா சலனே (23)

அலருக் குடலா கியவா வசனுய்க்
கலருக் குளிழிந் தகலன் றனையாள்
நலருக் கெசுசா மவதர் வணநா
வலருக் கதிபா வடபூ தரனே. (24)

ஆசா ரமுஞா னமுமன் புமெலாம்
ஈசா வுனவோ வெனவோ வெவனுன்
பேசா யிதுநீ டியரே ழுமலை
வாசா மலர்மா துறைமார் பகனே. (25)

தழையுந் திடஞா னிகடஞ் செவிவாய்
நுழையும் பொருடந் தெனைநோக் கியவா
விழையுந் திருவேங் கடவித் தகவென்
பிழையும் பகையும் பிறவுங் களையே. (26)

உற்று ரொடுகூ டியுறப் பெறினும்
நற்று மனைதன் னிலைநண் ணியநீர்
அற்று மெனவேங் கடமா ளுடையாய்
பற்று மைபணித் தருள்பண் ணுகவே. (27)

கள்ளங் கொலைகட் புலைகா மமிவை
உள்ளங் கதுவா தவுரந் தருவாய்
பள்ளந் திடரொன் றுபடுத் திநலம்
வெள்ளம் பெருகும் பணிவெற் பவனே. (28)

கேடா விளைமூ வகைகெர் வமிவை
சாடா வகைநன் மதிதந் தெனையாள்
சேடா சலவா சசிரீ கருடா
ரூடா பரலோ கசிரோ மணியே. (29)

நீரா டுவர்நன் னியமம் புரிவர்
ஆரா தனைசெய் குவரந் தணரே
தீரா வினையேன் செகமா யைதனிற்
போரா டுகெனோ பொறையே ழுவனே. (30)

தொழுவார் பணிவார் துதிசெய் குவர்தீ
இழுதா குவரெத் தனைவோர் கடையேன்
பழுதா னதிலே நசைபற் றுழியேன்
எழுபூ தரவுய் குவலெங் ஙனமே. (31)

கற்றுள் ளுணர்குற் றவர்கா தலினல்
சற்றுன் னையகன் றுதரிக் கலர்யான்
முற்றுன் னையிழக் கமுடித் தவினைக்
கெற்றென் றறைகே னெழுபூ தரனே.. (32)

வஞ்சித் தெனதுள் ளமறைந் துளைநீ
தஞ்சித் தமியற் கெவரே தழைசெம்
பஞ்சிச் சிறுமேன் பதபங் கருக
வஞ்சிக் கரிபா வடசை லவனே. (33)

வெங்கா னலின்வெள் ளவிபூ தியிதில்
தங்கா துனதாண் மலர்சார் குவனே
சங்கா ழிதரித் தசதுர்ப் புயவுத்
துங்கா வடசை லதுரங் தரனே. (34)

மாவிந் திரசா லமயக் குலகில்
நீவிந் தைசெயா திநிறீஇ யெனையே
கோவிந்த முரா ரிவைகுந் தபதா
பூவிந் திரைசேர் புயகா சலனே. (35)

மானார் பொருள்பூ மியின்மாழ் குவனான்
மேனா டுபெறற் குளனே விமலா
ஞானா திகர்யோ கர்கணற் றகவோர்
ஆனார் நுகர்வேங் கடவா ரமுதே. (36)

பொன்னாசை மணா சைபுயங் ககிரி
மன்னா பிறவா சையுமட் டிலையே
என்னா சையெனக் கிதிலே யிறையற்
றுன்னா சையுருத் திடிலுய் குவனே. (37)

மாயா சமுசா ரமெனும் வலைவாய்
ஓயா தபடுந் துயரொன் றலவே
தாயா கியென்வா தைதவிர்த் தருள்செய்
யாயா வடசை லவரும் பொருளே. (38)

பாரின் பவழிப் படர்பாழ் மதியேன்
பேரின் பமுறப் பெரிதுந் தொலையே
நேரின் பநிரே தகநேர் கிலதோ
சீரின் [illegible] தசிலைக் கரசே. 39

இனைவா னலிநம் பணிடும் பையினை
வினைவே ரறநோக் கினைவேங் கடவா
தனைமா னவெனின் னறவிர்ந் திடவே
எனையோர் பொழுதின் னமுநோக் குகவே. (40)

நீநா டுசகே துகநேர் வரிதால்
ஆனா நினிரே துகவங் கணருள்
தானா யினுயத் தகுமித் தமியேன்
மீனாய் வடவேங் கடவெற் பவனே. (41)

துன்பக் கடலிற் சுழியிற் சுழல்வேன்
இன்பக் கடலா டவெடுத் தவிடாய்
வன்புற் றயர்கேன் வடபூ தரநின்
அன்பெத் தகவோ வறிகின் றிலனே. (42)

ஒப்பா ருமிலா வுயர்பெற் றியைநீ
அப்பா நலமந் தமிலா மையையான்
இப்பா டுபடற் கெனைவிட் டவிதம்
செப்பா யரவச் சிலையா திபனே. (43)

அதிகா ரிகளுக் கருள்வைக் குதிநீ
துதியோ வதுநிற் கிதுசொல் லுகபுன்
மதியே னையுய்வித் திடின்மற் றிகழோ
புதியோய் பழையோய் புயகா சலனே. (44)

மருளே கமெய்ஞா னவளங் குலவத்
தெருளே றவுரங் கசிலைத் தனிமெய்ப்
பொருளே தமிமா டுபொலங் கெழுநின்
அருளே றவெடுத் தெனையாண் டுகொளே. (45)

ஈனத் துறைமா டிழியுந் தமியேன்
ஞானத் துறையா நெலந் தருமோ
வானத் துறைவேங் கடவா வதனத்
தானத் துறைநின் னொருதண் ணளியே. (46)

முந்துன் னைமறந் துழிமுன் னியுடல்
தந்துன் னைநினைக் குதறந் தனையே
அந்துன் னையரும் படைவேங் கடவா
வந்துன் னைவணங் கவகுத் தருளே. (47)

மாநே ரிழையாய் வடமா மலைமேல்
கோனே ரியில்வா ரிகுடைந் தடியேன்
யானே ரினினின் னையிறைஞ் சிடவே
தானே ரிடவொன் றுசமைத் தருளே. (48)

கார்மின் றிருவேங் கடமா மலைமேல்
ஓர்மின் னிரவித் திருவோ ணமதில்
தேர்மின் விழவைத் தெரிசிப் பதுசெய்
பார்மின் றிருமின் பயில்பைம் புயலே. (49)

மன்னு வடவேங் கடவா மலைமேல்
பொன்னு டவரோ நெதொழப் புகில்யான்
உன்னு லயம்வாழ் கணமுந் திவன்யார்
என்னு மலுளென் னையழைத் தருளே. (50)

அரிகே சவமா தவவச் சுதவேழ்
கிரிவா சவைகுண் டநிகே தனவோ
தரியே னுணர்குன் னொருசந் நிதிவந்
தொரியா னினிவீழ் குவனுன் பதமே. (51)

சுரரெத் தனைகோ டிதொழும் புசெய்வார்
நரரெத் தனைகோ டிநயக் குநராள்
உரரெத் தனைகோ டியுளங் கனாவார்
அரவத் திரிமே வுமரும் பொருளே. (52)

புளகந் தருமெய் புனல்கண் பெருகும்
உளகங் குழையும் முரையுங் குளறும்
விளகின் றவெனு ருயிரும் விமலா
இளகுந் திருவேங் கடமெண் பொழுதே. (53)

நித்தர்க் கெளியாய் மலநீங் கினர்போம்
முத்தர்க் கெளியாய் முதுவேங் கடவா
பத்தர்க் கெளியாய் பழவல் வினையிப்
பித்தற் கெளியாய் கொல்பெருந் தகையே. (54)

ஐயா வுரகா சலநின் னையலால்
மெய்யா கியதெய் வமும்வே றுளதோ
கையாள் பிரமா திகளா ககடை
பொய்யா துமிருண் டுபுகுந் தனனே. (55)

வாளா வழுகென் றென்வ ழுத்துரைகள்
கேளா தொழிகின் றனையுன் கிருபைக்
காளா கவமைத் தனையா மெனுநின்
தாளாண் மையிதோ வடசை லவனே. (56)

மூலப் பகுதித் தமமூழ் குமெனத்
தூலத் தையளித் ததுசொல் லுகநீ
மேலைத் தலமீ குதிவேங் கடவா
கோலக் குருவால் வளைகொண் டவனே. (57)

பாழின் பிறவிப் படர்வா ரிதியில்
சூழிந் திரியச் சுறவந் நுகர
ஊழின் கொடுமைச் சுழியூ டுழல்வேன்
வாழின் பிதுவோ வரையே ழவனே. (58)

தேவே திருவேங் கடவா திருமின்
கோவே கழிகுப் புறுமைம் புலனும்
காவே னுனபொற் கழலிற் கமலம்
தூவே னருடுன் னிடவோ வுளெனே. (59)

நடுவட் கடலோ டுறுநவ் வுமரம்
விடுபட் டுழல்கா கவிகங் கமெனக்
கெடுதுக் கபவத் தலைகின் றனனிக்
கொடுமைத் துளதோ வெழுகுன் றவனே. (60)

நீங்கா வபரா தங்கி னையும்
மாங்காய் மடிகட் டிவலிப் பவ்னீ
சோங்கா வடவேங் கடவா துயர்சூழ்
தீங்கா ழியெனைக் கரைசேர்த் திலையே. (61)

நீரிற் பறிமொக்குளினே ரிளமை
நீரிற் றிரைவாழ் வுடனீர் வரையே
நீரிற் றுணரோ னினையென் றடைகேன்
நீரிற்றி ருவேங் கடநின் றவனே. (62)

சுடுகின் றதுயர்ச் சமுசா ரவலைப்
படுகின் றலனெத் தனையும் பரம
தொடுகின் றிலன்வே றுதொழும் புனையான்
விடுகின் றிலன்வேங் கடமே லவனே. (63)

நீநா னெனுமுண் மையைநே டிலன்யான்
நானா னெனவெண் ணிநலிந் தழிகேன்
ஆனா லுமயர்க் கிலனை யவனை
மானா ககிரிப் பதம்வைத் தவனே. (64)

உன்னா லுனையெய் துவதொன் றலதேல்
என்னா லெவனா குவதெம் பெரும
பொன்னா டளறென் றவிபூ திதர
முன்னாய் வடவேங் கடமூ தொளியே. (65)

மின்றோன் றியிருந் துவிளிந் ததுபோன்
றின்றோ பிறகோ வெனவே கழியும்
புன்றோ லுடலிற் புகுதா தநிலை
என்றோ வருள்வா யெழுசை லவனே. (66)

பெருநா ளுயிரோ டுபிழைத் தவரும்
ஒருநா ளிலிறக் குவதுண் மையினுன்
இருதாள் பணிவே னயலெத் தவமும்
கருதேன் வடகோ டுகலந் தவனே. (67)

வன்பேய் நரிநாய் கள்வளைந் திதுநான்
தின்பே னெனுமூ னுதிரங் குடரே
என்பே யவொதுக் கிடமென் றகுடிற்
கன்பேய் கிலனே ழசலா திபனே. (68)

ஈயின் சிறகற் றிறைதோ லுரினும்
வேயின் கடிகோல் கொளவேண் டுவதே
வீயிந்த வுடற் கண்விருப் பமறேன்
நாயின் கடையேன் வடநன் னகனே. (69)

இழியுஞ் சலமோர் வழியெப் பொழுதும்
கழியும் மலமோர் வழிகா றியுமிழ்
அழிபுண் ணினருக் களியாக் கையின்வாழ்
வொழிவென் றுளையா யுரகா சலனே. (70)

தாய்தந் தையர்தா ரமெனக் குளபோல்
ஆய்நின் றனனெத் தனைகா லவருக்
கோய்வின் றியிவா றுபிறந் துழல்வேன்
தேய் வென்றுரகா சலசெப் புகவே. (71)

வேதா வவண்வைத் திலன்வெய் யநமன்
ஏதா கவும்வைத் திலனிங் கிலுமோர்
ஆதா ரமுமற் றலைகே னலர்மின்
நாதா திருவேங் கடநா யகனே. (72)

கோடிக் கழுதுங் குழையா யிதயம்
வேடிக் கையிதோ வடவேங் கடவா
நீடித் ததினம் பவநீ ரிழிவில்
வாடிக் கருகித் தனிமாழ் குவனே. (73)

புவிமா டுழலம் புலவே டுவரால்
அவிவேன் முறையிட் டலறுங் குரனின்
செவியே றலையே திருவுள் ளமிதே
கவிபாய் வடவேங் கடகா ரணனே. (74)

உளனென் றவருக் குளனீ யொருவேன்
அளவின் றெனலா லடியே னுளவு
களவென் றுளமோ கருணா நிதியே
வளன்விஞ் சுரகா சலமா மணியே. (75)

நின்றாய் திருவேங் கடநீள் வரைமேல்
கன்றா வறியா துகலுழ்ந் ததுபோல்
மன்றா டுதன்மா தவவாங் கிலையாற்
றென்றா லருளுக் கிடனெங் குளதே. (76)

செய்ஞ்ஞா றெனநின் செயலா றுகிடந்
துய்ஞ்ஞா னுளதோ வுரகக் கிரியாய்
மெய்ஞ்ஞா னிகளுள் ளம்விளங் கியவா
அஞ்ஞா னிகளுண் மறைவா னவனே. (77)

பாயப் புலிமா னைவிடுப் பதுபோல்
மாயைக் கெதிரென் னைவகுத் தனையே
நீயெப் படிபண் ணினுமெற் கினிதே
தாயொத் தபணிச் சயிலப் புயலே. (78)

வீடேகுகவென் னவிழைந் துசுடு
காடே வருகென் றகடைத் தலைநீ
ஊடே பிடிசாம் பலுறுஞ் சடமே
நாடே னிதைவேங் கடநா யகனே. (79)

தருமின் பமடந் தையருந் தமரும்
எருவின் றலையே நடினேன் றுதுணை
வருகின் றனரில் லெனவந் துமுடன்
மருள்கின் றனனென் வடபூ தரனே. (80)

வாசத் துணைவாழ்க் கைமகார் களெனும்
பாசத் தளைபட் டதுபோ துநின்வாய்
ஈசற் றும்விடா துணைவேழ் சயிலா
தாசத் துவபோ கரசந் தரவே. (81)

பாகித் தனையென் றுசெவாய் படிநீர்
தாகித் துமிஞர் தனமா முகடு
மோகித் துவிழுந் துமுயங் குமெனைப்
போகிக் கிரிவா ணபுரந் தருளே. (82)

புனைதண் ளெவா புயகச் சிலையா
உனையென் றனுளக் கமலத் தி னில்வைத்
தெனையுன் றனடிக் கமலத் தினில்வைத்
தினைவின் றியிருக் கையிழைத் தருளே. (83)

கையா மலகக் கனிபோன் மெனவே
மெய்யா நிலைதன் னைவிளக் கிவட
சையா வருள் பண்ணு தியோ தமியேன்
பொய்யா முலகிற் புலைபூ ணுகெனே. (84)

எண்ணு தனபல் லவுமெண் ணிமனம்
புண்ணு யழிகின்ற துபோது மியான்
கண்ணு லெனைநோக் கினைகாத் தருள்கார்
வண்ணு வடவேங் கடவா னவனே. (85)

கோலா கலசீ லகுரு கலனீ
ஆலா லமுகந் தவவிச் சையினல்
நாலா வகையென் னைநலிந் திடலென்
போலா வதுவேங் கடபூ பதியே. (86)

பாங்கா மனமா கியபா கன்விட
ஓங்கார ரதத் திலிவர்ந் தொரியான்
நீங்கா வொளிமா கநெறிப் படர்கேன்
வாங்கா யெனையே ழுமலைக் கரசே. (87)

கூனிக் குறுகிப் பொறிகுன் றிமகார்
தேனிற் கசியில் லவள்சிச் சியென
ஊனிற் றடிமா றுமுனுற் றருள்கார்
மேனித் திருவேங் கடவிண் ணவனே. (88)

கால்பற் றியடைத் தகடங் கடமே
ஆல்பெற் றியிவா வியகன் றிடுமுன்
நூல்பற் றியுனைப் பெறநோக் குதியோ
மால்பெற் கருளே வடசை லவனே. (89)

மலமுஞ் சலமுங் கிடைவாய் வழியப்
புலமைந் துமொடுங் கினபுந் திகலேக்
தலமந் திடுமுன் றிடும்மென் றருளாய்
இலகும் வடகுன் றிலிருப் பவனே. (90)

நாவிக் கெழுநன் னயனஞ் சுழலத்
தாவித் தளருந் தருணந் தனிலென்
ஆவிக் கொருபற் றுனையல் லதியார்
நீ விட்டிடல் வேங் கடநீண் முகிலே. (91)

கண்பஞ் சடையக் கபமீ றவொழுக்
குண்பஞ் சமுதங் கடைவா யொழுகப்
பெண்பிள் ளைகளும் பிறருங் கதறப்
புண்பண் ணுவையோ பணிபூதரனே. (92)

கையோய்ந் துமெய்கால் கள்குளிர்ந் துசளந்
ஐயேய்ந் துகுதம் பையடிக்குதலும்
மையாய்ந் துயிர்சோரு முன்வந்தருளாய்
மெய்யேந் தியவேழ் கிரிமேலவனே. (93)

ஓரைந் துபுலன் களொடுங் கிமனம்
சோரும் பொழுதுன் றுணைமென் கழல்கள்
சேரும் படிசெய் குதியோ திருமின்
ஆர்வம் பெருகே ழுமலைக் கரசே. (94)

மேதிப் பிடர்மேல் வலைவீ சியமன்
வாதித் துயிர்வவ் வுமுன்வந் தருளிச்
சோதிக் கமலத் துணைமென் கழல்கள்
சாதிக் குகபன் னகசை லவனே. (95)

உய்யா யினியென் னவுருத் துநமன்
கையா றுபடுத் திடுமுன் கடுகிச்
செய்யா ளொடுவந் துதிருப் பதியென்
ஐயா வபயத் தமளித் தருளே. (96)

மெய்ப்போ தமடங் கிவிசிப் புவிடும்
அப்போ துனையெண் ணலனப் பொழுதைக்
கிப்போ தெனையுன் னிடமிட் டனன்யான்
ஒப்போ டுகொளா யுரகா சலனே. (97)

செய்யோய் திருவேங் கடவா செறிசேன்
குய்யோ முறையென் றலறிக் கொடுபோய்
வெய்யோ னெரிமண் டவிபூ திசெயிப்
பொய்யோ டுபுணர்த் தல்புரந் தருளே. (98)

இப்பா வுடம் பினிடர்ப் படுவேன்
அப்பா வசமோ வினியாற் றகிலேன்
எப்பா லுனதா ளிணைசே ரவெனை
வைப்பாய் வடவேங் கடவா னவனே. (99)

மிடிபற் றியவே றுதெய்வங் களையான்
கொடிகுற் றிலனேர் கொடுநோக் கிலனல்
தடிகுற் றிடினுந் தலையைத் தலைமேல்
முடிவைக் கினும்வேங் கடமூ தொளியே. (100)

மட்டுத் துளவா வடவேங் கடவா
எட்டுத் திருவக் கரவென் னுயிர்மெய்
விட்டுப் பிரிபோ துவெளிக் கொடெதிர்
தட்டுப் படுவாய் தரிசித் திடவே. (101)

தந்தே றுகெனச் சுரர்தண் ணுரைபெற்
றந்தேர் மிசையே றியடைந் தமுதச்
சிந்தேய் புனரேய்ந் துதிசூழ்ந் துதிவம்
வந்தே றுவனே வடவெற் பவனே. (102)

ஏரூற் றெழுமைம் படையீ ரிருதோட்
சாரூப் பியமெய் துபதந் தருவாய்
வாரூப் பிரசம் பொழிவண் டுளபா
சீரூற் றுபுயங் கசிலைப் பரனே. (103,

அறவோய் வடசை லவெனு ருயிருக்
குறவோ யுனதுள் குழைசே வைதனைப்
பெறவா சைபிடித் தமயக் கினன்யான்
மறவே னொருபோ துமலர்க் கழலே. (104)

அணிவால் வளையா ழியுமம் புயைசேர்
மணிமார் பகமும் மகரக் குழையும்
திணிதோண் முகமுந் தெரிசித் திடவே
பணிபூ தரவந் தருள்பண் ணுகவே. (105)

வீழ்கும் பியிலென் றுவிதிக் கினும்விண்
வாழ்வின் பமடுப் பவகுக் கினுநீ
ஏழ்குன் றுடையா யுனதீ ரடிகள்
சூழ்கின் றவருத் திதுடைக் கலையே. (106)

உடையா யெனதா ருயிரே யொருவேன்
இடையா தறுடைத் தனையெம் பெரும
துடையேல் வடகற் சுடரே யுயிர்சோர்
கடைகா றுனைநா டெருத் தினையே. (107)

சீர்பெற் றதிருச் சயிலா திபவென்
மார்வத் துநிகே தனமூ லவயின்
ஏர்பெற் றநிஞு தபிடே கமதிற்
சார்வத் தனிநா னமமைக் குவனே. (108)

நெஞ்சத் தளியே நினையன் பெனுநன்
மஞ்சப் புனலாட் டிமலைக் கரசே
அஞ்சத் திகமென் மலரார்ச் சனைசெய்
விஞ்சற் புதநூ சைவிரிக் குவனே. (109)

மெய்யே பொறையே தவமே யகனூல்
நெய்யே மதிதூ பநினக் கிடுகேன்
ஐயே வடபூ தரவா ரிருள்வன்
பொய்யே யகலப் பொருள்சாணியவே. (110)

தீந்தண் புனலன் ப்புபஉ ரமதே
சாந்தஞ் சுகுணம் மிருசார் நசையே
பூந்தொண் டொடைநன் புகைதீ பிகையே
மாந்தன் னறியான் வடபூ தரனே. (111)

சொத்தே யொருநீ சொமியா னிதனை
வைத்தேன் வலிதென் னுண்மறந் திலனால்
எத்தே மெதுபோ தெவவத் தையிலும்
முத்தே திருவேங் கடமூ தொளியே. (112)

---

## வாழ்த்து.

புதுவெ ணவநீ தமுண் டனையொரு
பொழுதுமணும் வாரியுண் டனைமிக
அதுபுரைய நீடுதண் டமிழ்மறை
அறை பதின்மர் பாடல்சொண் டனை தமி
மதுரகவி தாசனென் புலமையில்
மடமைகொடு கூறுபுன் பனுவலும்
பொதுமையி னவாய்மகிழ்ந் தனைநனி
புயககிரி வாணமங் களமரோ.

---

ஆர்த்திரசமாலை சம்பூர்ணம்.

திருவேங்கடமுடையான் றிருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# அலர்மேல்மங்கைத் தாயார் பேரில்

# பிரபத்திமாலை.

---

## காப்பு.

அமிழ்தோ டெழுபெண்ணமிழ் தம்மலர்மேலஞ்சோதி
உமிழ்பூண் முலைமின் மேற்சொன் மாலையுரைசெய்யத்
தமிழ்வே தஞ்செய் சதுர்நா வீறன் சடகோபன்
கமழ்பூ வகுளா பரணன் சரணங் காப்பாமே.

## நூல்.

நாடுந் தருமம் பொருளின் பமுநந் தாமுத்தி
வீடுந் தருமா நின்றண் கருணை விழிசாத்தாய்
நீடுஞ் சுருதிக் கலைமாண் செல்வர் நெடுநாளும்
தேடுந் நிதியே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

நனைமென் கொங்கைப் பொழிபா லமுத நனியூட்டி
எனைவாழ் விப்பா யென்றே கண்டா யெம்மோயே
புனையா யிழையாய் புயகா சலையே பொறிமானே
சினைவா யளியா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

அந்தா ளொன்றிற் றுறைசால் புனலி லளிமேவும்
செந்தா மரைமா தவஞ்செய் தீன்ற செல்வத்தின்
சந்தா னப்பெண் ணமுதே கண்டாய் சரணீயென்
சிந்தா குலந்தீ ரலர்மேன் மங்கைத் திருமின்னே.

மூன்றென் னுலகு மெல்லா வுயிரு முழுவானும்
ஈன்றும் முதிரா விளமென் முலையா யிடராழித்
தோன்றுந் தமியேன் கரைகாண் டற்குன் றுணைமெ
ன்றுள் தேன்றுண் மலர்தா வலர்மேன் மங்கைத்
திருமின்னே.

பாராய் நீரா யழலாய் வளியாய்ப் படர்வானாய்
வாரா வரவா யெனையாட் கொள்வாய் வாராயோ
ஆரா வமுதே யறிவிற் கறிவே யவிர்பொன்னே
சீரார் மணியே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

வேதா வரனிந் திரன்வே தாந்த வித்துக்கள்
ஓதா துணர்ந்தா ருணரும் பாற்றே யுன்சீர்த்தி
மாதா நீயே மழவீன் கன்றின் வழுமாந்தும்
சேதா நீயே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

கண்டார் கண்ட காட்சிப் பேறே கருவிற்சீர்
உண்டாய் நின்றா ருள்ளுந் தொழுமெய் யுணர்வூடே
தண்டா வி..பவ கொழிக்குஞ் செல்வத் தமரீயச்
செண்டா முலையா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

உயிரா மால வாலத் துணர்வம் புய்ப்பார்க்குப்
பயிரா யொளிபூத் துலவா வருளின் பழமாகி
அயிரா மின்பத் தீந்தேம் பில்கு மருமந்த
செயிர்தீர் தருநீ யலர்மேன் மங்கைத் திருமின்னே.

தொழும்பா நின்றன் றுணைத்தாண் மலரைத் துதித்
தென்னுத் தழும்பே றச்செய் வல்லாய் நீயே தனி
நங்காய் கெழும்பூ வுந்திச் செங்கட் டருவிற் கிளர்ந்
தோடுஞ் செழும்பூங் கொடியே யலர்மேன் மங்
கைத் திருமின்னே.

கொங்கே றியபூங் கழல்கட் கடியேன் குற்றேவல்
எங்கே செய்யப் பணிக்கின்று யீண் டொசெய்யாய்
பங்கே ருகமென் பொற்பூந் தாதிற் பயிலுந்தூய்ச்
செங்கே ழொளியா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

பாவிச் சிந்தை விடயங் களிலே பாய்வேனைக்
கூவிக் கொள்ளும் படியெற் குண்டோ கூறாய் நீ
ஆவித் துணைமா விதயத் தெழுதி யன்பூறச்
சேவித் துருகு மலர்மேன் மங்கைத் திருமின்னே.

அங்கோ கனக னரனிந் திரன்வா னவர்மண்ணோர்
பைங்கோ கனர் சேவிப்பார் சூழ்ந்தார் பாரம்மா
எங்கோ னந்தா மத்தெம் மிறையோ டெழுகுன்றிற்
செங்கோ லோச்சு மலர்மேன் மங்கைத் திருமின்னே.

தருமம் பொருள்கா மம்வீ டெய்தத் தகுவோர்நின்
அருமந் தவபாங் கம்பெற் றோரே யன்றோகாண்
திருமந் தமிதந் தருமின் னகவிற் றிருமாலுள்
தெருமந் துருகு மலர்மேன் மங்கைத் திருமின்னே.

ஓங்குந் திவவா னந்தக் களிசூ ழுசதற்கண்
தூங்கும் போகந் துய்க்குங் காலந் தோன்றுதோ
வாங்குஞ் சிலைவா ணுதலாய் மாயோன் மணிமார்பில்
தேங்குஞ் சுடரே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

தந்தா வளமோ விடவந் தருள்செய் தனிமூர்த்தி
பைந்தார் மார்பிற் பயிலோ திடமே பரமேட்டி
அந்தா மீயென் றுரபக் கனலை யாற்றாய்நீ
செந்தா மரைமெல் லலர்மேன் மங்கைத் திருமின்னே.

மாற்றந் தருவா யடியேன் விண்ணப் பம்மானே
சீற்றந் தருவா யல்லைப் பொன்னே தெரிபூணாய்
ஊற்றந் தருவா யுழுவற் றகவா லுனைநாடும்
தேற்றந் தருவா யலர்மேன் மங்கைத்திருமின்னே.

அங்கம் பதறக் கண்ணீ ருகவுள் ளன்பூற
எங்கண் ணருள்பா லித்தற் குளைநீ யெம்மோயே
சங்கந் திகிரி தனுவா டண்டு தழுவுங்கைச்
செங்கண் முகில்சே ரலர்மேன் மங்கைத் திருமின்னே.

வில்வந் தருபைங் கனிமென் கொங்கை மிளிர்வேற்க
ண் அல்வந் தொளிர்தண் கலைவாண் மதியா னனநோக்
கிப்- பல்வந் தனைசெய் தரியுள் பருகும் பைந்தேனே
செல்வந் தாரா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

சூடத் தகுவேங் கடவா ணன்றன் றுணைமானே
ஆடப் பாடத் துதிசெய் துன்றண் ணருளின்பம்
நாடத் தேட நலனெற் கருளாய் நால்வேதந்
தேடக் கூடா வலர்மேன் மங்கைத் திருமின்னே.

சிவனுன் முகனிந் திரன்வா னவரும் சேவிக்கும்
பவனு சனபூ தரநா யகியே பரந்தாமீ
நவமே னவமா விளையே ரின்ப நலமோங்கும்
திவவாழ் வருளா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

பரிவிற் கனல்வாய் மெழுகொத் துருகிப் பதறுற்றே
பிரிவற் றுனைநா ளுடும் பெற்றி பிறப்பித்தாள்
துரிசற் றுணர்வுற் றுப்பற் றுநர்துற் றுந்தேனே
தெரியற் குழலா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

நாடா ளரசும் விண்ணோர் வாழ்வு நான்வேண்டேன்
பீடார் நின்பொற் பாதக் கமலம் பெறவேட்டேன்
சூடா மணியே சுடர்சூழ் பூணுய் சுரிகூந்தால்
சேடா சலையே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

கருதே னுன்னைக் கரிவேன் காமக் கனலின்கண்
விருதா வகையேன் றனைவா னோர்க்கும் மிகவிட்டாய்
பெருவாழ் வுண்டாம் போதும் பிழைபா டுளதேயோ
திருவேழ் கிரியா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

கூர்ப்பிற் புருவங் குனிக்குங் குறிப்பிற் குளிரூர்கட்
பார்ப்பிற் றன்பால் வசித்தென் பாற்கொள் பரன்சீற்
றம் தீர்ப்பித் தருளிச் செவ்வே தொண்டு செயவென்
னைச்- சேர்ப்பித் தருளா யலர்மேன் மங்கைத் திரு
மின்னே.

கயிலா யஞ்சத் தியலோ கம்வை குண்டந்நின்
பயில்வா னன்றே மாண்பே ரின்பம் படர்கின்ற
மயிலா மியலாய் நின்றண் கருணை மாநோக்கம்- செயி
ல்யா னுய்ந்தே னலர்மேன் மங்கைத் திருமின்னே.

மீவா யதலம் புவிவா யடவி வெற்பேனும்
நீவாழ் போழ்து நிறைசீ ரின்ப நிலவிற்றால்
ஆவா நின்றண் ணருளு டுற்றேற் கெற்றம்மே
தேவா திகையே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

பாழா நிலனுந் தேறுங் காலைப் பனையே நீ
வாழா நிலமே யன்றோ காண்வந் துறைபோழ்தீர்
ஏழா முலகும் மின்பங் குலவும் மிடமன்றோ
சீழா லெனையா ளலர்மேன் மங்கைத் திருமின்னே.

சுத்தாங் கங்கற் றறியே னியமந் தொடகில்லேன்
பித்தாந் தன்மைப் பேயே னாயேன் பிழைகொள்ளாய்
சத்தாந் தனிவே தாந்தப் பழநூற் றக்கோர்கள்
சித்தாந் தஞ்செ யலர்மேன் மங்கைத் திருமின்னே.

மைவாய் வேற்கண் விண்ணோர் நாட்டு மடநல்லார்
நெய்வார் கூந்தற் பிறநா ரியர்நிற் கென்னுவார்
குய்வான் மலராள் வாலாம் பிகைநின் குற்றேவல்
செய்சே டியரே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

நீரொட் டுநிரம் பியவா னவனின் னிகரில்சீர் - ஓரொட்
டுவனைப் பொருளுட் பொருளா யொளிகொண்டாய்
பாரெட் டுநெடுந் திசையும் பரவிப் படர்கீர்த்திச்
சீரெட் டுதவா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

இருதொல் லைவினைப் பிறவிக் கடல்வா யிடரெய்தித்
தெருமந் தழிகேன் படுமென் றுயரந் தீர்கண்டாய்
கருமஞ் சுறழ்வண் ணன்கண் டிதயங் களிகூரும்
திருமுன் றிலினு யலர்மேன் மங்கைத் திருமின்னே.

என்னிற் பிழைசெய் குநரிவ் வுலகி லெவரே மற்- றுன்
னிற் பொறைகோட் டக்கார் யாருன் னருள்வன்மை
பன்னிற் பெரிதே யளவிட் டுணரற்பாற் றன்றென்
சென்னிக் கணிநீ யலர்மேன் மங்கைத் திருமின்னே.

காரும் மின்னுங் கதுவிற் றென்னக் காயாம்பூ
நேரும் வண்ண னொடுநின் சேவை நீதாராய்
பாரும்விண்ணு மெல்லா வுயிரும் பாரித்த
சீருந் தியினு யலர்மேன் மங்கைத் திருமின்னே.

வெவ்வேறுருவாய்த் தோன்றி வீந்து வெறிதேநான்
தெவ்வே றியவெவ் வினையின் சுழியிற் றிரிவேனைத்
துவ்வே லற்றென் றுன்கோற் பெறுமா சுகவேலை
செவ்வே கூறு யலர்மேன் மங்கைத் திருமின்னே.

உரோகத் தினினல் குரவிற் பசியி லொருகோடி
விரோதித் தடருங் கொடுவல் வினையின் மெலிகின்
றேன்- சரோசத் துணைநின் றூடங் துதவாய் தவர்வா
னோர்- சிரோரத் தினமே யலர்மேன் மங்கைத்
திருமின்னே.

நானே யுன்னை வேண்டிப் பெற்றுன் னற்றாளில்
தானே தொண்டு செய்யப் பெறநீ தயைசெய்யாய்
வரனே யென்னும் வண்டடற் சிற்றில் வகுத்தாடும்
தேனே மானே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

பழுதே காலங் கழித்தே னுன்றன் பதமூலம்
தொழுதே னருள்செய் குதியோ வம்மே சுடராழி
முழுவால் வளைநீண் முகில்கண் டுவகை முடியேறும்
செழுமா மயிலே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

வெந்தா நிரயத் துழல்கென் றேவீ வில்வீடு
தந்தாட் கோடு மென்றே வுளதுன் சங்கற்பம்
அந்தா மத்தெம் பெருமா னிதயத் தவிர் பாவாய்
சிந்தா மணியே யலர்மேன் மங்கைத் திருமின்னே.

உலைவாய் மெழுகொத் துள்ளங் கரைந்தன் பசும்பூற
மலையே யிலக்கா மவனையாட் கொள்வான் வரவேண்
டும் அலைபா லாழி மெய்க்கொங் கீன்றவம் பொன்னே
சிலைவா ணுதலா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

ஊர்சூழ் பன்றிக் கெதிராய் மாறு ருதிரஞ்சீ
வார்சூல் புண்ணின் விரியுங் குழிவாய் மாழ்காமே
பார்தா ழரவக் கிரிசே விக்கும் பணிநல்காய்
சீர்சூழ் கழலா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

ஆலங் கடலிற் கொதிகொண் டெழலுற் றதுமானக்
காலன் கடிதுற் றுயிரைக் கவர்முன் கழனல்காய்
ஞாலம் பயிலுந் திருவேங் கடநா யகியேமாண்
சீலம் பயிலு மலர்மேன் மங்கைத் திருமின்னே.

பைம்பொற் றொடியார் விடயத் தறிவு பறிபோயேன்
அம்பற் குடலா யந்தோ வலமந் தழிகின்றேன்
உம்பர்க் கெய்தா வொருவன் மணிமார் புறையாவிச்
செம்பொற் பாவா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

பரைநீ பரனே டுறையுஞ் சேர்த்திப் படியென்னே
உரைமால் பொருணீ மணிமா லொளியே யொருநீதா
மரைமால் விரைநீ மதிமா னிலநீ வனமாலிந்
திரையே திரைநீ யலர்மேன் மங்கைத் திருமின்னே.

வெறிதிற் காம வெகுளி மயக்கின் வெறிகொண்டேற்
கறிவிற் கறிவா யின்பந் தேக்கி யருளாயோ
பிறிவிற் றரியா வாவித் துணையைப் பிச்சேற்றிச்
செறிபொற் பூவா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

அன்னே பொன்னே யாரா வமுதே யந்தேனே - உன்
னேன் வடகுன் றுடைநின் னல்லா தொரு தெய்வம்
பின்னே நீந்தேங் குழல்கைக் கோண்டு பிண்ணுக்குத்
தின்னேன் றின்னே னலர்மேன் மங்கைத் திருமின்
னே.

நூற்கண் ணுணர்வு தூண்டா வருநீர் நொய்மாந்தர்
காற்கீ ழென்னைத் தாழ்த்தற் கென்னுன் கருத்துந்தா
ன் ஏற்குந் தகைத்தோ வருள்சூற் கொண்ட வீணசே
ர்ந்த சேற்கண் மானே யலர்மேன் மங்கைத் திருமின்
னே.

அம்மா நின்றண் ணருளேக் கம்பெற் றூரல்லார்
சும்மா சோதி வானோர் போகந் துய்க்கிற்பார்
கம்மா திகணின் னனுபூ தியினுற் கைவந்தார்
செம்மாண் பிணையா யலர்மேன் மங்கைத்திருமின்னே

என்றன் புன்மைக் குன்றண் ணளியே யிலக்காமற்
றுன்றண் ணளிக்கு மென்றன் புன்மை யுதுமஃதே
நன்றன் றிருவே மகலும் பொருணற் பயனோர்வாய்
தென்றண் கமலத் தலர்மேன் மங்கைத் திருமின்னே.

மாமங் களகல் யாணிப் பொன்னே மணியேநின்
நாமந் தமியேன் மறவே னென்றுஞ் ஞாலத்தே
காமம் பலவு முதவிக் கடையிற் கதிபெற்றுய்
சேமந் தாரா யலர்மேன் மங்கைத்திருமின்னே.

தகவுந் தாராய் தவமுந் தாராய் தனிவீடு
புகவுந் தாராய் பொருளுந் தாராய் புரிசெல்வம்
மிகவுந் தாராய் நுகரும் பொழுதில் விளைதீமை
செகவுந் தாரா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

நன்மங் கலைசு வரியங் தருவேங் கடநங்காய்
வன்மங் களைவைக் கலைநா யேன்பான் மலமாயை
கன்மங் களையா மூடெண் டபெருங் கவலைத்தாம்
சென்மங் களையா யலர்மேன் மங்கைத் திருமின்னே.

மாவிக் கின்றே னமிர்தா வென்னுள் வளர்கின்றாய்
ஆவிக் கின்றேன் பாழ்ம்புன் றொல்லை யன்னத்தின்
தூவிக் கின்றே னின்றாள் வண்மை சொலவற்றோ
சேவிக் கின்றே னலர்மேன் மங்கைத் திருமின்னே.

அலர்மேல் மங்கைத்தாயார் பிரபத்திமாலை சம்பூர்ணம்

அலர்மேல் மங்கைத்தாயார் திருவடிகளே சரணம்.

# நோட்டீஸ்.

மனிதர்களானருத்திக்கப் படுவனவாகிய புருஷா
ர்த்தங்கள் நான்கு. அவற்றுள் இம்மையிலடையத்
தக்கவை தருமம், அருத்தம், காமம் என்பவை மூன்
றும். மறுமையிலடையத்தக்கது மோக்ஷ மென்ப
தொன்றேயாம்:—

ஆதலால் சர்வ சுவாமியாய் ஸ்ரீயஃபதியாய் தீன
தயாளுவாய் சர்வாபிஷ்டபலப்பிரதனாய் எழுந்தரு
ளிய திருவேங்கட முடையான்பேரில் எளிதில் இம்
மைப்பயனை யடையும்படிக்குத் தரிசனப்பதிகமும்
ஆக்சப்பாமாலையும், மறுமைப்பயனையடையும்படிக்கு
ஆர்த்திரசமாலையும் இதனைச் சேர்ப்பிக்கப்பெறுதற்கு
புருஷகார பூதையான ஸ்ரீ அலர்மேலு மங்கைத்தாயா
ர் பேரில் பிரபத்திமாலையும், ஆக நான்கு பிரபந்தங்
களடங்கியுள்ள திந்நூல். இதனை விசுவசித்
டன் அனுசந்திப்பவர்கட்கு எளிதில் எல்ல
டங்களுமுண்டாம். எம்மவர்களே! இதனை
கைநெல்லிக் கனிபோல உண்மையென்று
பிடித்து அன்புசெலுத்தி வாழ்வீர்களா
பிரார்த்திக்கின்றனன். இப்புத்தகம் வேண்
இதனடியில் கண்ட விலாசத்துக்கு எழுதிப்
கொள்ளலாம்.

இங்ஙன

தாசன்,

ச. முத்துகிருஷ்ண மதுரகவிராமாநுஜ உடாத்
தியாயர், கூத்திபார்றை பாலவனத்தம்போஸ்டு மதுரை
டிஸ்டிரிக்ட்.